# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண்.313/2006

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. K. அம்பிகா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி 1 வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2020 ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 20.01.2020**

**பெயர் - சுஜாதா**

**க/பெ - சிவக்குமார்**

**வயது -**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம் -11.56am**

**முதல் விசாரணை -**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது வாக்குமூலம் பிரமாணபத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். 24.11.1979 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசல் வாசா ஆ 1 ஆகவும். 23.11.2006 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசா ஆ 2 ஆகவும். பட்டா எண் 223ன் அசல் வாசா ஆ 3 ஆகவும். 9.11.2006 தேதியிட்ட அசல் கிஸ்து ரசீது வாசா ஆ 4 ஆகவும். பட்டா எண் 208ன் புத்தகம் வாசா ஆ 5 ஆகவும். 28.11.2006 தேதியிட்ட வில்லங்க சான்றிதழின் அசல் வாசா ஆ 6 ஆகவும். 24.7.2013 தேதியிட்ட இறப்பு சான்றிதழின் அசல் வாசா ஆ 7 ஆகவும். 12.11.2013 தேதியிட்ட வாரீசு உரிமை சான்றிதழின் அசல் வாசா ஆ 8 ஆகவும். 25.02.2019 தேதியிட்ட நாராயணின் இறப்பு சான்றிதழின் அசல் வாசா ஆ 9 ஆகவும். அசல் வழக்கு 348/1993ன் வழக்கின் ஆவணத்தின் சான்றிட்ட நகல் வாசா ஆ 10 ஆகவும். 29.11.2018 தேதியிட்ட நீதிமன்ற

உத்தரவின் சான்றிட்ட நகல் வாசா ஆ 11 ஆகவும். 21.3.2011 தேதியிட்ட வட்டாச்சியர் அனுப்பிய அறிவிப்பின் அசல் வாசா ஆ 12 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**விசாரணை முடியும் நேரம் -12.05pm**